முருகப்பெருமான் துணை

**மகான் கணநாதர் நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**28.11.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. பேருலகை காக்கும் சக்தியாக
பேராசானாக வந்த குருவே
ஆறுமுக அரங்கமகா தேசிகனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ தேளின் திங்கள்
தெரிவிக்க விய திகதி கதிர் வாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 12ம் நாள், 28.11.2021 ஞாயிற்றுக்கிழமை)
தேசிகனுக்கு கணநாதர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான பாதுகாப்பு மிக்க
ஞானம் அருளி மக்களை காக்கும்
ஞானியரின் அருள்தயவு பெற்றவர் எல்லாம்
4. எல்லோரும் பிரணவக் குடிலாம்
ஏழாம்படை வீட்டை தொடர்ந்துவந்து
வல்லமைதரும் அரங்கன் திருவடி
வணங்கி வழிகாட்டுங்கள் என
5. என வேண்டி விரும்பி வர
இணையிலா சடாட்சர தீட்சை
ஞானமாக மக்கள் ஏற்றுவிட
நம்பகத்தன்மை மிகுதி ஆகி
6. ஆகியே அரங்கன் வழிவரும்
அன்பர்கள் அனைவருக்கும் மாற்றம்
அகிலத்தில் ஞானமாக நிறைந்து
அற்புதம் இந்த உலகம் அடையும்
7. அடையவே மக்களை தேற்றும்
ஆறுமுகப் பெருமான் அருளை
தடையின்றி வரமாகத் தரும்
தவசியரின் கரம்பட்ட மக்கள்
8. மக்களெல்லாம் மகான்கள் ஆகும்
மகத்துவம் தனை கண்டடைவர்
ஆக்கமுடன் தரும ஞான
அறநெறி பிசகா மக்களாகி
9. ஆகியே கலித்துன்பங்களை
அகற்றும் மாற்றும் வல்லமை
அகிலத்தில் உலகோர் அடைந்து
ஆளுமைதனை ஞான வழி மாற்றும்

10. மாற்றும் மகா சக்திகளும்கூடி
மாண்புள ஞான ஆட்சித் தருவர்
ஆற்றல்பட உலகை காத்து
அழிவென்பது அனுகா மீட்பர்

11. மீட்பர் ஞானிகள் ஆளுமைபட
மீள்வர் ஆறுமுகன் துணைபட
மாட்சிமைபட ஞானிகள் படைகளாகி
மண்ணுலகே ஞான உலகமாகும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–